1982 செப்டம்பர் 10]

என்று அதை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே நடவடிக்கை என்பது, 10 ஆண்டுக்காலத்திற்கு முன்பு நடந்ததற்கு இப்பொழுது நடவடிக்கை எடுப்பது என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. இருந்தாலும், உங்களுடைய கோரிக்கையாக அதை ஏற்றுப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெல்ட்டை எல்லா சீட்டுகளுக்கும் உபயோகப் படுத்தவில்லையென்றாலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே, முதலிலே உள்ள சீட்டுகளிலே உட்காருபவர்கள், பிரேக் போடுகின்ற நேரத்தில், சிலநேரங்களில், கண்டக்டர்கள் மீது போய் விழவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறதே, அந்த சீட்டு களுக்கு மட்டுமாவது அந்தபெல்ட் சிஸ்டத்தை நடைமுறைப் படுத்த அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதைப் பயன்படுத்தலாம், தவறில்லை. ஆனால், பயணிகள் கொஞ்சம் பாதுகாப்பாக அமர்ந்துகொள்வது நல்லது. காரணம், அந்த பெல்ட்டைப் போட்டு கட்டிவிட்டு, வேறு ஏதாவது விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில், அதை அவிழ்ப்பதற்காகக் காலத்தை வீணாக்கிக் கொண்டு உள்ளே தடுமாறிக் கொண்டு இருக்கக் கூடாது. எனவே, அந்த வகையிலே பார்க்கும்போது இது பாதுகாப்பாகக்கூட இல்லை என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது.

இராமநாதபுரம் தொகுதியில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

* வினா எண். 57—திரு. டி. இராமசாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா

(அ) இராமநாதபுரம் தொகுதியில் பனை மரத்தில் கிடைக்கும் பொருட்களை வைத்து தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர் மற்றும் மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் பனைத்தொழில் மையம் ஏற்படுவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு அரசால் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் ரூ. 24·566 இலட்சம் மான்யமாக அனுமதிக்கப்பட்டது.

மாரியூரில் உள்ள நிலம் வன இலாகாவைச் சேர்ந்ததால் அந்நிலத்தை மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையத்திற்கு கொடுப்பதற்காக மத்திய அரசு அவசரச் சட்டத்திலிருந்து விதி விலக்கு வாங்கித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசின் அனுமதியை எதிர்நோக்கி மாரியூரில் தொழிற் கூடங்கள் கட்டுவதற்கான கட்டுமான பொருட்களை வாங்குவதற்காக டெண்டர்கோரி பத்திரிகையில் விளம்பரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மண்டபம் பகுதியில் திட்டத்தினை விரைவில் செயல்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாரியூரில் எந்த அளவிற்கு அவர முயற்சிகளை மேற்கொண்டு அந்தத் தொழிற்சாலையை நடத்த அத்தனை காரியங்களைச் செய்ததைப்போல மண்டபத்திலும் உடனடியாகச் செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பனைமரத்திலிருந்து பல்வேறு பொருட்கள் கிடைக்கின்றன ஆரம்பிக்க இருக்கின்ற அந்தத் தொழிற்சாலையில் பனைமரத்திலிருந்து கிடைக்கும் எந்தப் பொருட்களைப் பயன் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரம்பிக்கப்படவிருக்கும் மாரியூர் மற்றும் மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் நுங்கு பதப்படுத்தும் நிலையமும், கற்கண்டு உற்பத்தி நிலையமும், நுங்கு உற்பத்தி நிலையமும், நார்ப்பொருட்கள் உற்பத்தி நிலையமும், ஓலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும், கிரஷ் உற்பத்தி நிலையமும், கிழங்கு மாவு உற்பத்தி நிலையமும், பனஞ்சீனி சர்க்கரை ஆலை முதலியவையும் நிறுவப்படும்.

திரு செ. சிவசாமி : பேரவைத் தலைவவர்களே, நுங்கு அபிவிருந்தி செய்யும் பரிசீலனை எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் மயமாக்குவதைப் பற்றிய கேள்வி. நுங்கு பதனிடுவது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து அதில் வெற்றிகரமாக முடிவு தெரிந்திருப்பதால் அதைப் பதனிடும் தொழிலை இப்படிப்பட்ட மையங்களில் ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.